ஆக்கம்: ஆசிரியை T.பேபி ஷாலினி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

# தெளிவு

## பகுதி 01

### "தெளிவு" என்ற சிறுகதையை எழுதிய மு.பஷீர் பற்றிய சிறுகுறிப்பு

- இவர் கம்பஹா மாவட்டத்தில் மினுவான்கொடை பிரதேசத்தில் கல்லொழுவ கிராமத்தில் பிறந்தார்.
- சிறுகதை, கவிதை, ஆய்வு என சுமார் 40 வருடங்களாக எழுத்துப் பணியில் ஈடுபட்டு வருபவர்.
- இவரது படைப்புக்கள், சமூக யதார்த்தம் பேசுபவை, கலைத்துவமானவை.
- இவரது படைப்புக்களில் பயன்படுத்தும் மொழி, விடயச் செறிவும் எளிமையும், உணர்வோட்டமும் கொண்டவை.
- இவரது முதற்கதை 1986ல் வெளிவந்த மீறல்கள் என்பதாகும். அத்தோடு தலைமுறை இடைவெளி எனும் சிறுகதைத் தொகுதியும் உள்ளடங்கும்.
- இலக்கியத்திற்காக கலாபூசனம் என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

**தபால் ஊடகத்தின் தற்கல நிலை**

தபால் என்ற ஊடகம் இன்று பெறுமதி இழந்து காணப்படுகின்றது.

**தபாலினதும், தபால்காரநினதும் அன்றைய நிலை**

- அன்றைய காலத்தில் தபாலே இன்ப துன்பங்களை சுமந்து வரும் ஊடகம்
- தபால்காரரின் வருகை அதிகாலை வேளையில் ஆவலோடு எதிர்பார்க்கப்படும். வெளிநாட்டுப் பயணம், பரீட்சைப் பெறுபேறுகள், உறவுக்காரர்களின் தகவல்கள் இப்படி பலவற்றை சுமந்து வரும் தெய்வ தூதராக மதிக்கப்பட்டவர் தபால்காரர்.

**இக் கதையின் மையக்கரு**

"தபால் காரர் ஒருவரின் வாழ்வும் வறுமை நிலையும்"

**கதையின் களம்......**

ஊரின் வீதிகள், கடைகள், சைக்கிள் வண்டிப் பயணம், பாரூக் நானாவின் வீடு என்பன.

**பாத்திரங்கள்......**

- பாரூக் நானா
- பாத்தும்மா
- மைமூனாக் கிழவி
- சரீனா பேகம்
- நிஷ்தார்

## இக் கதையில் இடம்பெறும் கிராமம் பற்றிய சித்தரிப்பு

- வீதிகள் மேடு, பல்லமாக காட்சி தருதல்
- பலரகமாக மனிதர்கள்
- நிழல் நிறைந்த குறுகலான செம்மண் பாதை, கலவன் பாடசாலை, விழுது பரப்பி அடர்ந்து செரிந்த ஆலமரம் துல்லியம் துலங்கும் இறை இல்லமான பள்ளிவாசல், குச்சில் வீடுகள், மாடி வீடுகள் தேநீர் கடைகள், கால்நடைகள், செயற்கை முகம் கொண்டிராத கிராமத்தவர்களின் உண்மை சிரிப்புகள்.
- பொருளாதார சுமை எல்லோருக்கும் பொதுவாக கானப்படும்.
- வீண் வம்புகள் வளர்தல்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1. ‘‘தெளிவு’’ எனும் பாடப்பரப்பில் விபரிக்கப்படும் கிராமம் பற்றிய சிறப்பினை விளக்குக.
2. பின்வரும் சொற்களுக்கான பொருளைத் தருக.

   I) மூண்ட

   II)கல்பு

   III)முஹப்பத்

   IV)புஹீலன்
3. அன்றைய, இன்றைய தபால் ஊடகத்தின் நிலை பற்றி விபரிக்குக.
4. மு.பஷீர் பற்றி சிறு குறிப்பு 5 தருக.
5. ‘‘தெளிவு’’ என்ற பாடத்தின் மையக்கரு யாது?